2.1 2nd copy

Copy 15.3.69

நாடார்கள் குலம்பற்றி 14.3.69 அன்று செல்லப்பாளையம் வந்திருந்த அவர்களின் குருவான ஆண்ட சிவசுப்பிரமணியப் பண்டிதர் சொன்ன சில விபரங்கள்:-

1. நாரித்திலகன் (கொங்குநாடார்)
2. நவநாரிக்குஞ்சரன் (நாட்டுநாடார்)
3. கனகரேகன் (மதுர குலம்)
4. மதன சுந்தரன் (கருமங்கைரை அல்லது சின்னமதுரை)
5. கமல கேசரன் (கல்யாணி நாடார்)
6. கமல கேயூரன் (கீழாணி குலம்)
7. கமல ரோசனன் (கிராமணி குலம்)

மேற்கண்ட ஏழுகுல நாடார்களின் தாய்மார்கள் எல்லாம் அக்கா தங்கைகள் இவர்களை சத்தியகன்னிகள் என்றும் சொல்கிறார்கள். மேற்கண்ட ஏழுகுல நாடார்களும் ஒருவர்க்கொருவர் பங்காளிகள்.

மேற்கண்ட ஏழு குலத்திலும் "நாரித்திலகன்" என்ற குலம் வம்சமில்லாமல் போய்விட்டதாக குரு சொல்கிறார். மற்ற 6 குலங்கள் மட்டும் இப்போது நாட்டில் இருக்கிறது என்று சொல்கிறார். இவர்களில் நவநாரிக்குஞ்சரன் என்ற "நாட்டுநாடார்குலம்" கன்னபுரம் & வீரசோழபுரம் கிராமத்தில் இருப்பவர்கள்.

இந்த நாட்டுநாடார் குலத்தினர் சுமார் 2000 (இரண்டாயிரம்) ஆண்டுகளுக்கு முன்பு திருநெல்வேலி ஜில்லா வைகுண்டம் தாலூகா "நட்டாத்தி" என்ற இடத்திலிருந்து கொங்குநாட்டில் வந்து குடியேறியதாக சொல்கிறார்கள். இக்குலத்தினர் கோபி தாலூகாவில் குன்னத்தூர் பக்கம் சுமார் 1000 குடும்பங்கள் இருப்பதாக சொல்கிறார்கள். இவர்கள் 1000 குடும்பமும் குன்னத்தூருக்கு வடக்கே 6 மைல் தூரத்தில் ஆதியூர் என்ற ஊரில் "பத்ரகாளி" என்னும் பெயருடன் குலதெய்வம் வைத்து வருஷா வருஷம் திருவிழா நடத்தி வருகிறார்களாம். அதுபோல், கன்னபுரம் & வீரசோழபுரம் கிராமத்தில் இருக்கும் நாடார்களுக்கு வீரசோழபுரத்தில் இருக்கும் "அடஞ்சாரம்மன்" என்னும் தெய்வம் குலதெய்வம்.

பழையகோட்டை கிராமத்தில் இருக்கும் நாடார்கள் கனகரேகன் என்ற "மதுர குல நாடார்".

மேற்கண்ட 7 குலங்களுக்கும் 2 குருக்கள் உண்டு.

அவர்களில் 1. ஆண்ட சிவசுப்பிரமணியப் பண்டிதர், கவுண்ட
ஊர்: கருமாபுரம், திருச்செங்கோடு தாலூகா.
கருமாபுரம் குருக்கள் பெரியமடம்.

2. ஆண்ட சிவ சுப்பிரமணியப் பண்டிதர் பெருந்துறைமடம்
ஊர்:- பெருந்துறை, ஈரோடு தாலுகா, கோவை ஜில்லா.

இந்த இரண்டு குருக்கள் மடங்களிலும் கருமாபுரம் மடம் பெரியதாகவும், பெருந்துறைமடம் சிறியதாகவும் கூறப்படுகிறது.

முதலில் கூறப்பட்ட 7 குல நாடார்களிலும் "நாரித்திலகன்" என்பதில் வம்சமில்லாமல் போய்விட்டதால் மீதி 6 குலங்கள்.

6 குலங்களிலும் கருமஞ்சரை, கல்யாணி, கீழாணி இந்த மூன்று குல நாடார்களும் கருமாபுரம் மடத்து குருக்களுக்கு சேர்ந்தது. அவருக்குத்தான் வருஷா வருஷம் காணிக்கை கொடுப்பார்கள்.

நாட்டு நாடார், மதுரகுலம், கிராமணி இந்த மூன்று குல நாடார்களும் பெருந்துறைமட குருக்களுக்கு சேர்ந்தது. அவருக்கு மூன்று குலத்தினரும் வருஷா வருஷம் காணிக்கை கொடுப்பார்கள்.

மேற்கண்ட ஏழு குல நாடார்களும் ஆதி காலத்தில் ஏதோ ஒரு ராஜா விடத்தில் அடிமைவேலை செய்து கொண்டிருந்தார்களாம். அப்போது அந்த ராஜாவானவர் ஏழு பேருக்கும் ஏதோ ~~ஏழு~~ பெண்களை கல்யாணம் செய்து வைத்தாரும். "அவ்வகையால் இந்த ஏழு குல நாடார்களுக்கும் மாமன் மைத்துனர் ஏற்பட்டிருக்க வேண்டுமென்று" குருக்கள் சொல்கிறார்.

மற்றபடி ஏழு குலங்களுக்கும் மாங்கல்யம் எது என்பது கீழே:-

1. நாரித்திலகன் (கொங்கு நாடார்) பெரியமாங்கல்யம்.
2. நவநாரிக்குஞ்சரன் (நாட்டு நாடார்) சிறுமாங்கல்யம்
3. கனகரேகன் (மதுரகுலம்) சிறுமாங்கல்யம்
4. மதன சவுந்தரன் (கருமஞ்சரை) சிறுமாங்கல்யம்
5. கமலகேதரன் (கல்யாணிகுலம்) சிறுமாங்கல்யம்
6. கமலகேயூரான் (கீழாணிகுலம்) பொட்டுமாங்கல்யம் → 
7. கமல ரோஜனன் (கிராமணிகுலம்) சிறுமாங்கல்யம்.

---

நாடார்கள் பற்றி விவரம் சொன்னவர் 14.3.69 அன்று தேவப்பாளையம் வந்திருந்த பெருந்துறைமடம் சிவசுப்பிரமணியக் குருக்கள்.
இவர் சிவப்பிராமணர் குலத்தை சேர்ந்தவர்
வயது சுமார் 40 இருக்கலாம்.

நாடார்களின் குரு 14.3.69 ஒருநாள் பூராவும் செலப்பாளையத்தில் தங்கியிருந்தார். அவர் House No 33 நாடார் வீட்டில் தான் தங்கியிருந்தார். அந்த வீட்டின் சிறிய ~~Room~~ வீடு ஒன்றை குருவுக்கு கொடுத்திருந்தார்கள். அந்த வீட்டில் குரு சமையல் செய்து சாப்பிட்டார். பிறகு பகல் சுமார் 12 மணிக்கு சுவாமிகள் வைத்து பூஜை செய்தார். அவருக்காக விட்டிருந்த வீட்டின் உள்ளே அவரிடமிருந்த பத்ரகாளி, விநாயகர், முருகன் ஆகிய விக்ரகங்களை வைத்து பஞ்சாமிர்தம், திருநீர், தேங்காய்பழம் இவைகள் எல்லாம் வைத்து பூஜை செய்தார். அப்போது செலப்பாளையத்தில் எல்லா நாடார்களும் வந்திருந்தார்கள். பிறகு செலப்பாளையத்தில் உள்ள ஒவ்வொரு நாடார் குடும்பத்திலும் (ஒவ்வொரு குடும்பத்திற்கு) நாலு (4) ரூபாய் குருக்களுக்கு கொடுத்தார்கள். அதில் 3 ரூபாய் குரு காணிக்கை. 1 ரூபாய் குருவுக்கு சாப்பாட்டு செலவிற்காகவும் ஆக 4 ரூபாய் வீதம் கொடுத்தார்கள்.

இந்த குரு இதற்கு முன் செலப்பாளையத்திற்கு வசூலுக்கு வந்து 12 வருஷங்கள் ஆகிறதாம். 12 வருஷத்திற்கு பின் இந்த வருஷம் வந்ததால் ஒவ்வொரு குடும்பத்திலும் 3 ரூபாய் வீதம் குருகாணிக்கை சேர்த்து கொடுத்தார்கள். 15.3.69 காலையில் குருக்கள் மூக்கங்காடு ஊருக்கு சென்றுவிட்டார்.

சிவப்பிராமணர் இனத்தின் உள்ளே 5 இனங்கள் இருக்கிறதாம்.

அது:- 1. ஈசானம் (ஆதிசிவாச்சாரி)
2. தற்புருஷம் (அகோர சிவாச்சாரி)
3. வாமதேவன் - (நம்பூதிரி)
4. சத்யோஜாதம் - (பட்டர்)
5. அகோரம் — ( ? )

இவைகளில் ஆதிசிவாச்சாரிகள் பூஜைக்கு ஏற்பட்ட முக்கியமான 5 சிவாலயங்கள்: சிதம்பரம், திருவண்ணாமலை, காளகஸ்தி, காஞ்சீபுரம், திருவானைக்காவல்.

அகோர சிவாச்சாரிகள் பூஜைக்கு ஏற்பட்டது கொங்குமண்டலத்தின் முக்கியமான ஏழு சிவாலயங்கள்:- ஆதிகரூர், அதிகவெஞ்சமாங்கூடல், பாண்டிக்கொடுமுடி, பவானி, அவிநாசி, திருமுருகன் பூண்டி, பேரூர் ஆகிய சிவாலயங்கள்.

வெலப்பாளையத்தில் இருக்கும் ஐயர்கள் அகோர சிவாச்சாரி இனத்தை சேர்ந்தவராம்.

மேற்சொன்ன 5 இனத்தினரும் பங்காளிகள்.

மற்றபடி வாமதேவன், சத்யோஜாதம், அகோரம் இவர்களுக்கெல்லாம் எந்தக்கோவில் என்பது புரியவில்லை என்று நாடார்களின் குருக்களான ஆண்டை சிவசுப்பிரமணியப்பண்டிதர் அவர்கள் சொன்னார். மேற்கண்ட விபரங்கள் எல்லாம் கொடுத்தது பெருந்துறைமடம் ஆண்டை சிவசுப்பிரமணியப்பண்டிதர் அவர்கள்.

குறிப்பு:- ஆண்டை சிவசுப்பிரமணியப்பண்டிதர் ஆதி சிவாச்சாரி இனத்தை சேர்ந்தவர்.